**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.258 of 2023

Deposition of P.W.1

Name of the Witness: *திருமதி.தமிழரசி*

Date : 05.03.2025

***5 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை***

எத்தனை சொத்துக்களுக்காக வழக்கு போட்டுள்ளேன் என்றால் இருக்கும் எல்லா சொத்திற்கும் போட்டுள்ளேன். எத்தனை அயிட்டங்களாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அரசுக்கு எழுதி கொடுத்த சர்வே எண் தெரியாது. ஆனால் 22 1/4 சென்ட். அந்த சர்வே எண்ணில் 22 1/4 சென்ட் போக மீதி எவ்வளவு உள்ளது என்று எனக்கு தெரியாது. 22 1/4 சென்ட் நிலத்தையும் சேர்த்து எல்லா சொத்தையும் தான் நான் விவசாயம் செய்து வருகிறேன். 2ம் இன சொத்தில் உள்ள எல்லா சொத்துக்களும் என் மாமனார் பெயரில் உள்ளது. அதற்குண்டான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். கணினி சிட்டாவை தவிர வேறு எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) ஏற்கனவே என் மாமனாரும், எனது கணவரும் பூங்காவனம், நாகராசுக்கு விற்ற சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். விற்ற ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மாமனாருக்கும், எனது கணவருக்கும் அது தனிப்பட்ட சொத்து என்பதால் தான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் என் மாமனார், என் கணவருக்கும் தனிபட்ட சொத்து

என்பதால் வாதிகளாகிய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்துக்களில் பாகவிகிதாச்சாரம் சரியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. என் கணவரும், மாமனாருக்கும் சொத்தில் உரிமையுள்ளது என்பதால் பொது நலத்திற்காக அரசாங்கத்திற்கு சொத்தை எழுதி கொடுத்துள்ளார்கள் என்றும் அது சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல.

3) மூதாதையா் சொத்து என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொத்து மூதாதையர் சொத்து என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.